பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 15 புதன்கிழமை (28-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 151

## கிருலப்பனை பொலிஸ் பொறுப்பதிகாரி தகவல்

# லலித்தின் கூட்டத்துக்கு பாதுகாப்பு வழங்க வேண்டாம் என உத்தரவு

## சிரேஷ்ட அதிகாரி விடுத்தாராம்

கொழும்பு, ஏப்ரல் 28

லலித் அத்துலத் முதலி சுடப்பட்ட கிருலப்பனைக் கூட்டத்திற்கு பாதுகாப்பு வழங்க வேண்டாம் என சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் வாய்மொழி மூலம் எனக்கு உத்தரவிட்டார் அதனாலேயே அக்கூட்டத்திற்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை. கடவுள் சாட்சியாக இதனைக் கூறுகின்றேன்.

—இவ்வாறு கூறினார் கிருலப்பனை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி லெஸ்லி ரணதிலக.

மேற்படி அதிகாரி உடனடியாகக் களுத்துறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார் என்றும் அறிவிக்கப்பட்டது.

## அஞ்சலி செலுத்த மக்கள் பல மைல் நீள வரிசையில்!

சுட்டுக் கொல்லப்பட்ட லலித் அத்துலத் முதலிக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக மக்கள் தொடர்ந்து அவரது பிளவர் வீதி இல்லத்தின் முன் பல்லாயிரக் கணக்கில் திரண்டு வருவதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

லலித் உயிரிழந்து நான்காம் நாளான நேற்றும், பல மைல் நீளத்துக்கு வரிசையில் மக்கள் லலித்துக்கு அஞ்சலி செலுத்தக்காத்து நின்றனர்.

தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் சீருடையில் காணப்பட்டனர்.

மதகுருமார்கள் உட்பட பலர் லலித்தின் பூதவுடலைக் கண்டதும் வாய்விட்டு அழுததைக் காணக்கூடியதாக இருந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

## லலித் சுடப்பட்ட கூட்டம் பற்றிய வீடியோப்படம் நீதிமன்றில்!

லலித் அத்துலத் முதலி சுட்டுக் கொல்லப்பட்ட கிருலப்பனைக் கூட்டத்தின் வீடியோப் படப் பிரதி ஒன்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது.

லலித் கொலை பற்றிய பூர்வாங்க விசாரணைகள் நேற்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்றன.

அப்போது அங்கு சமர்ப்பிக்கப்பட்ட வீடியோப் பிரதியை நீதிமன்ற பாதுகாப்பில் வைக்குமாறு அரச தரப்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிக் கிரியை இன்று: கொழும்பில் படை குவிப்பு!

சுட்டுக் கொல்லப்பட்ட லலித் அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலம் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கொள்ளுப்பிட்டி பிளவர் வீதியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து ஆரம்பமாகும்.

மாலை 5 மணிக்கு பூதவுடல் பொரளை கனத்தை மயானத்தை வந்தடையும். மாலை 6 மணிக்கு சிதைக்கு தீ மூட்டப்படும்.

லலித்தின் இறுதி ஊர்வலத்தை ஒட்டி, கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது. பொலீஸாரும் இராணுவத்தினரும் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர் கலகம் அடக்கும் படையினரும் ஆயிரக் கணக்கில் வீதிகளில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

(உ-த-6)

## நேற்று பிறந்ததினம்

லலித அத்துலத் முதலியின் துணைவியார் ஸ்ரீமானி அத்துலத் முதலியின் பிறந்த தினம் நேற்றாகும்.

## அரச தரப்பினர் வந்தால் தாக்குதலுக்கு இலக்காவர்

இன்று நடைபெறவிருக்கும் லலித் அத்துலத் முதலியின் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்ற அரச தரப்பு அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்கள் வந்தால் அவர்கள் அங்கு திரண்டிருக்கும் பொதுமக்களால் தாக்கப்படக் கூடும் என அச்சம் நிலவுகிறது.

—இவ்வாறு செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

அராலித்துறையில் கண்ணி வெடியில் உயிரிழந்த ஸ்ரீலங்கா இராணுவ உயரதிகாரி லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவவின் இறுதிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கிளாலி படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஏப். 28

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## வாதுவவில் தபால்கள்

நெல்லியடி, ஏப். 28

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் ''வாதுவ'' கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நாளை வியாழக்கிழமை நண்பகலுடன் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனேகமாக நாளை மாலையே அந்தக் கப்பல் கொழும்பு நோக்கிப் புறப்படும். இக்கப்பலில் வெளி மாவட்டங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் உரிய தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## பலாலிக்கு நேற்று பலமுறை வந்து சென்ற விமானங்கள்

நேற்றுக் காலை முதல் மாலை வரை விமானங்கள் மணிக்கு ஒரு தடவை பெரும் இரைச்சலுடன் பலாலியில் இறங்கிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

லலித் அத்துலத் முதலியின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெற இருப்பதை ஒட்டி தெற்கில் பாதுகாப்பைப் பலப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதற்காக வடக்கில் குவிக்கப்பட்டுள்ள படையினரில் ஒரு சாராரை தெற்கிற்கு அழைத்துச் செல்வதற்காக விமானங்கள் பலாலிக்கு வந்து சென்றிருக்கக் கூடும் என பேசப்பட்டது.

## லலித் கொலைப் பின்னணி; இரகசியமாகவே இருக்கும்

லலித் அத்துலத் முதலியின் படுகொலை தொடர்பான பின்னணியும் இன்னொரு பரம இரகசியமாகவே இருக்கப் போகிறது.

இவ்வாறு பொதுமக்கள் கருதுவதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

ஜனாதிபதி பிரேமதாஸா, லலித் கொலைக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை சர்வதேச மட்டத்தில் வெளிப்படுத்த வே ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸாரை அழைக்கும் யுக்தியை மேற்கொண்டார் என லலித்திற்கு அஞ்சலி செலுத்த வந்த இளைஞர் ஒருவர் குறிப்பிட்டார்.

எந்த விசாரணையாலும் எத்தகைய பயனும் கிடைக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுடப்பட்ட தினத்தன்று

## லலித் வீட்டுக்கு 3 முறை தொலைபேசி மூலம் மிரட்டல்

லலித் அத்துலத் முதலி இரவு சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்னர், அன்றைய தினம் அவரது மனைவிக்கு தொலைபேசி மூலம் கொலை பற்றிய பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

இது பற்றிய ''ராவய'' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தகவல் வெளியிட்டார்.

அன்றைய தினம் லலித்தின் வீட்டுக்கு மூன்று தடவைகள் இத்தகைய தொலைபேசி அழைப்புகள் கிடைத்ததாகவும்—

கொச்சை மொழியில் பேசிய ஒருவர் ''வெகு விரைவில் சடலம் வரும். லலித்தின் மனைவியை குளித்து விட்டு இருக்கச் சொல்லுங்கள்'' என்று தொலைபேசி மூலம் தெரிவித்ததாகவும் விக்டர் ஐவன் குறிப்பிட்டார்.

(உ-6)

## அப்பாவியான என் மீது போலியான குற்றச்சாட்டு

### புலம்புகிறார் பிரேமா

கொழும்பு, ஏப். 28

அத்துலத்முதலி கொலை குறித்து அப்பாவியான என் மீது போலியான குற்றச்சாட்டைச் சுமத்துகின்றார்கள். உண்மை ஒரு நாள் வெளிவந்தே தீரும்.

ஜனாதிபதி பிரேமதாஸா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் தமது கட்சியின் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்து வைத்து, அங்கு கூட்டம் ஒன்றில் பிரேமதாஸா உரையாற்றினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

துரதிர்ஷ்ட வசமாக படுகொலை செய்யப்பட்ட லலித் அத்துலத் முதலிக்கும் எனக்கும் இடையே எந்த விதச் சச்சரவும் இருந்தது இல்லை.

அவருக்கும் எனக்கும் எந்த விதமான போட்டியும் இருந்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## தொப்பிகல காட்டில் கடும் மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 28

மட்டக்களப்பு மாவட்டம் தொப்பிகல காட்டு பகுதியில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று கடும் மோதல்கள் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது

படையினருக்கு பலத்த இழப்புக்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

தொப்பிகல காட்டு பகுதியில் ஸ்ரீலங்கரப் படையினர் ''சுமண - 2'' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு வருவது தெரிந்ததே.

இந்த நடவடிக்கையின் போது ஐந்து படையினர் காயமடைந்ததாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

[உ-ந-எ-3]

## வடக்கிற்கான போக்குவரத்து: உதவ ஐ. நா. தூதரகம் தயார்!

கொழும்பு, ஏப். 28

யாழ்ப்பாணத்துக்கும் இலங்கையின் மற்றப் பகுதிகளுக்கும் இடையிலான போக்குவரத்தைக் கண்காணிக்க அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் தயாரென இத்தூதரக நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டதாக— பி. பி. ஸி. நேற்றிரவு தகவல் வெளியிட்டது

இதே தகவலை வெரித்தாஸ் வானொலியும் நேற்றிரவு ஒலிபரப்பியது:

பெரியளவிலான மீட்பு உதவிப்பணிக்கு திட்டமிட்டுள்ளதாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் கூறவில்லை. பொதுமக்களும் சைக்கிளில் செல்லும் சிறு வர்த்தகர்களும் பாதுகாப்பாகச் செல்ல வசதி செய்யப் போவதாக மட்டுமே அது கூறுகின்றது என்றும்—

இந்த ஏற்பாட்டுக்கு அரசும் விடுதலைப் புலிகளும் அங்கீகாரம் அளிக்க இன்னும் சிறிது காலம் பிடிக்கும் என்றும்— பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

[அ-த]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்தியத் திருச்சபை-யாழ்.பேராயம் பெண்கள் ஒன்றியம்

தொழில் பயிற்சி நிலையம்
கிறீன் வைத்தியசாலை வளாகம், மானிப்பாய்.

தையல் பயிற்சி, கைப்பணி, சமையற்கலை, சிகைஅலங்காரம், ஆகிய துறைகளில் 6 மாத கால இலவச பயிற்சி.

(சித்தி அடைவோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்)

தினமும் மானிப்பாய்க்கு வந்து போகக் கூடிய, பாடசாலை கல்வியை முடித்துக்கொண்ட பெண் பிள்ளைகள் இதில் சேர்ந்து கொள்ளலாம். நேர்முக தேர்விற்காக எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி [06-05-93] மாலை 3. 30 மணிக்கு மதகுரு மற்றும் பாடசாலை அதிபரின் சிபார்சுக் கடிதங்களுடன் நேரில் வரவும்.

செயலாளர்,
பெண்கள் ஒன்றியம்,
யாழ். தென்னிந்திய திருச்சபை.

(சி/4953)


# விக்னா கல்வி நிறுவனம்


52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**95** பிரிவு 2
கலை, வர்த்தக வகுப்புக்கள்

புதிய பிரிவு 02-05-1993
காலை 9-00 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல் | — | திரு. விக்கி |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்துநாகரிகம் / இந்துசமயம் | — | திரு. காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராஜா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறீதரன் |

★ 95 ஆம் ஆண்டுக்கு III பிரிவு மட்டுமே ஆரம்பமாகும்.
★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-4956)


# நன்றி செலுத்தும் ஆராதனை



தோற்றம்: 28 — 02 — 1914

மறைவு: 31 — 03 — 1993

திருமதி
## லில்லி பொன்னம்மா பொன்னு

எதிர்வரும் 30 - 04 - 1993 வெள்ளிக்கிழமை காலை 11-00 மணிக்கு நடைபெறவுள்ள திருமதி லில்லி பொன்னம்மா பொன்னு அவர்களின் நன்றி செலுத்தும் ஆராதனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

01 - 04 - 93 இல் நடைபெற்ற இவரது நல்லடக்க ஆராதனையில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

A. V. பொன்னு (கணவன்)
(இளைப்பாறிய ஆசிரியர்)
சாந்தி பொன்னு (மகள்)

'ஜெயவாசா'
குடத்தனை.
(25429)

# ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகத் தேர்வு

மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் பணியாற்ற விண்ணப்பித்த கணித/ விஞ்ஞான/ வர்த்தக/ ஆங்கில ஆசிரியர் தெரிவுக்கான நேர்முகத் தேர்வு 03 - 05 - 93 திங்கள் மு. ப. 10.00 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள கல்விக் கழக நடுவப் பணியகத்தில் நடைபெறும். பின்வரும் ஆவணங்களுடன் குறித்த நேரத்தில் சமுகமளிக்கவும்.

1. பிறப்பு சான்றிதழ் மூலப்பிரதி
2. கல்வித் தகைமைச் சான்றிதழ் மூலப்பிரதி
3. அண்மையில் பெற்ற நற்சான்றிதழ் பத்திரம் இரண்டு
4. அனுபவம், அல்லது மேலதிக தகைமையினை வெளிப்படுத்தும் பிற சான்றிதழ்கள்

குறிப்பு :— மேற்படி ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்களும் விரும்பின் மேற்காட்டிய சான்றிதழ்களுடன் அன்றைய தேர்வுக்குச் சமுகமளிக்கலாம்.

பொறுப்பாளர்,
தமிழீழக் கல்விக் கழகம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி/5059)

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அருளம்பலம் சுப்பிரமணியம்**
(தனலட்சுமி மில், நிதாளா ஸ்ரோஸ், உரிமையாளர்)
புன்னாலைக்கட்டுவன் வடக்கு
இறப்பு: 02—05—1987



**அண்ணாமலை சந்திரசேகரம்**
(பிரகாஸ் ரைஸ் மில், உரிமையாளர்)
புன்னாலைக்கட்டுவன் வடக்கு
இறப்பு: 02—05—1987

ஐயனார் வீதி.
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
சுன்னாகம்.

தகவல்:
மகன், மைத்துனன்
(25428)

## இன்று

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பாடசாலைகளில் சித்திர பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று புதன் காலை 10-00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

o o o

பாஷையூர் புனித அந்தோனியார் இளைஞர் கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு பாஷையூர் மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. (ஒ)

o o o

திருவள்ளுவர் மன்றம் நடத்தும் திங்கள் ஓர் உரையரங்கும், கலந்துரையாடலும் என்னும் நிகழ்ச்சியின் சித்திரைத் திங்கள் நிகழ்வு இன்று புதன் கிழமை மாலை 4-00மணிக்கு உரும்பராய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

''குறள் காட்டும் குடிமை-குடி செயல் வகை'' என்னும் பொருளில் திரு. க. அருளானந்தம் உரை நிகழ்த்தவுள்ளார். [க]

## ஆலயங்களில்

கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார்கோவில்வருடாந்த மகோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 4ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

உற்சவ தினங்களில் தினசரி இரவு 8 மணி தொடக்கம் 9 மணி வரை திரு. ஆறு. திருமுருகன் பெரியபுராணத் தொடர் விரிவுரை நிகழ்த்துவார். (ஒ)

o o o

கொக்குவில் கிழக்கு காட்டுப்புலம் முருகமூர்த்தி கோவில் கும்பாபிஷேக தின சகஸ்ரமஹா சங்காபிஷேகமும் பூந்தண்டிகை உற்சவமும் இன்று காலை 10மணி முதல் நடைபெற்று இரவு 7மணிக்கு அழகிய பூந்தண்டிகையில் சுவாமி எழுந்தருளி கிராமப் பிரதக்ஷிணம் வருவார்.

(க-51)

o o o

சாவகச்சேரி ஆவரஞ்சாட்டி கந்தசாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். (உ-117)

## நாளை

வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் வட்டத்தில், மார்ச் — ஏப்ரல் மாதங்களில் இதுவரை வீரச்சாவினைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் வீர வணக்கக் கூட்டம் நாளை இரவு 8 மணிக்கு மாமுனை பாடசாலைக்கு அருகில் நடைபெறவுள்ளது. (உ-144)

## சிறுமி பலி

யாழ்ப்பாணம், ஏப். 28

மன்னார்த்தீவில் படையினர் கடந்த 13ஆம் திகதி அன்று நடத்திய கண் மூடித்தனமான ஷெல் தாக்குதல் மற்றும். துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவற்றினால் 10 வயதுச் சிறுமி ஒருத்தி உயிரிழந்தார். முஸ்லிம் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். கட்டடம் ஒன்றும் சேதமடைந்தது. (உ-3)

## கற்கை நெறி

பொது நிர்வாகப் பட்டப்பின் கற்கை நெறிக்கான தொடக்க நிகழ்ச்சி எதிர்வரும் முதலாம் திகதி யாழ் பல்கலைக்கழக பொருளியல் துறை விரிவுரை மண்டபத்தில் காலை 9-00 மணிக்கு நடைபெறும் என்றும் —

இக்கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டோருக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)


O/L DAY CLASSES

ஆரம்பமாகிவிட்டன.
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி - யாழ்.
(சி/4954)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக அரசு மீது குற்றச்சாட்டு:

# ராணிப்பேட்டைத் தொகுதி இடைத்தேர்தல் திடீர் ரத்து

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

சென்னை, ஏப். 28

தமிழகத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி நடத்தப்பட விருந்த ராணிப்பேட்டை சட்டசபைத் தொகுதிக்கான இடைத்தேர்தலை தேர்தல் ஆணைக்குழு கடைசி நிமிடத்தில் ரத்துச்செய்துவிட்டது.

இடைத்தேர்தல் நெருங்குகின்ற சமயத்தில் ஐந்நூறு கோடி ரூபாவுக்கும் அதிகமான சமூகநலத் திட்டங்களை ராணிப்பேட்டைத் தொகுதியில் நடைமுறைப் படுத்தப்போவதாக தமிழக அரசு அறிவித்தது தேர்தல் விதிமுறைகளுக்கு முரணான செயல் என்ற காரணத்தால் இடைத்தேர்தல் ரத்துச்செய்யப்படுவதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல் நெருங்கும் சமயத்தில் கோடிக்கணக்கான ரூபா செலவில் ராணிப்பேட்டையில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்ததுபற்றி தேர்தல் ஆணைக்குழு மாநில அரசிடம் விளக்கம் கேட்டது என்றும் —

அதற்கு மாநில அரசு விளக்கம் அளிக்கவில்லை என்றும் இந்த மௌனம் அதை ஒப்புக்கொண்டது போலாகும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தமிழக அரசு அப்பட்டமான முறையில் இப்படித் தேர்தல் நெறிமுறைகளை வேண்டும் என்றே மீறுவதை பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமுடியாது என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ராணிப்பேட்டை சட்டசபைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யும் இறுதித் தினம் நேற்றுமுன்தினம் முடிவடைந்தது தெரிந்ததே. ஒ-ஏ

## பண்டத்தரிப்பு கல்விக்கோட்ட அதிபர் - ஆசிரியர்கள் கூட்டம்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கு முக்கிய அறிவித்தல்களை வழங்கும் வகையில் இன்றும், நாளையும் (புதன்-வியாழன்) கொத்தணி ரீதியாக கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

இக்கூட்டங்களில் அதிபர்கள், ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும் எனவும் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

தெல்லிப்பளை, அம்பனை, அளவெட்டி, மல்லாகம், காங்கேசன்துறை கொத்தணியைச் சேர்ந்தோருக்கான கூட்டம் இன்று புதன் மாலை 4-00 மணிக்கு மருதனார் மடத்தில் உள்ள யூனியன் கல்லூரியில் நடைபெறும்.

வட்டுக்கோட்டை கொத்தணிக்கான கூட்டம் நாளை 29ஆம் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், சுழிபுரம், பண்டத்தரிப்பு, காரைநகர் கொத்தணிகளுக்கான கூட்டம் நாளை பி.ப. 3-00 மணிக்கு சித்தன்கேணி சனசமூக வித்தியாசாலையிலும், இளவாலைக் கொத்தணிக்கான கூட்டம் நாளை மாலை 4-00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வில்லூன்றித் தீர்த்தக் கேணி சித்திரைப் பூரணை முதல் பாவிப்புக்கு

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற வில்லூன்றித் தீர்த்தக் கேணி புனரமைக்கப்பட்டுள்ளது. அதற்குரிய பாதையும் இப்போதுள்ள இடத்திலிருந்து மாற்றப்பட்டு சுகாதாரமான ஓர் இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

வில்லூன்றித் தீர்த்தக் கேணியை மக்கள் அந்தியேட்டி மற்றும் ஆண்டுத் திவசக் கருமாதிகளைச் செய்வதற்குத் திறந்துவிட ஒழுங்குகள் நடைபெற்றுள்ளன.

இந்தத் தீர்த்தத் தலம் மக்கள் பாவிப்புக்காக எதிர்வரும் சித்திரைப் பூரணை தினத்தன்று திறந்து விடப்படும் என்று தீர்த்தத் தல அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

அன்றைய தினம் பழைய வழக்கப் பிரகாரம் வில்லூன்றி விநாயகர், தீர்த்தக் கேணிக்கு எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.

சுமார் நாற்பது வருடங்களுக்குப் பின்னர் வில்லூன்றித் தீர்த்தக்கேணியில் இப்படி ஒரு சிறப்பு நிகழ்வு இடம்பெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தீர்த்தக் கேணியை எவ்வித சிரமம் இன்றியும் ஆசாரமுறைப்படியும் மக்கள் தொடர்ந்து பயன்படுத்தக் கூடியதான ஒழுங்குகளை அபிவிருத்திக் குழு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மனித முன்னேற்ற நடுநிலையம் நிவாரணம்

குருநகர், ஏப். 28

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு யாழ். மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் உலர் உணவுப் பொருள்களை நிவாரணமாக வழங்கியுள்ளது.

16 லொறிகளில் தருவிக்கப்பட்ட 145 மெற்றிக் தொன் உலர் உணவுப் பொருள்களை அப்பகுதிகளில் வழங்கி இருப்பதாக நிலைய நிர்வாக செயலர் சங். சகோதரி எம். கஸ்மீர் தெரிவித்தார். (இ-51)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

ஈராண்டுப் பகுதி நேரப் பட்டப்பின் கல்வித் தகைமை கற்கைநெறி 1992/93

**புதிய அனுமதி**

அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 1993-05-31இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக் கற்கை நெறி தொடர்பான விண்ணப்பங்களைப் பெற விரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 10/- செலுத்திப் பற்றுச்சீட்டினைக் கல்விக் கிளை, சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வு நாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 1993-07-25 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

தெரிவு செய்யப்படுவோர் 25 மைல் சுற்றடலில் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு, இக்கற்கை நெறிக்குப் பதிவு செய்யும் பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1993-05-31ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

— பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்,
1993-04-23.

(சி-5054)



**பாரதிதாசன் கல்வி நிறுவனம்**
**(BECON)**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 95 கலை, வர்த்தகம்**

புதிய பிரிவு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| வர்த்தகம் | — | பசில் |
| அளவையியல் | — | S. S. மனோகரன் |
| தமிழ் | — | திருமதி மீரா |
| இந்துநாகரிகம் | — | பாலா |
| அரசியல் | — | பஞ்சாட்சரம் |
| புவியியல் | — | ஜோசப் |
| கிறிஸ்தவம் | — | கொலின்ஸ் |

ஆரம்பம் 02 - 05 - 1993

8 - 00 a.m. (-/4950)



பரி. யோவான் கல்லூரி

உலக சுற்றாடல் தினம்

**கட்டுரைப் போட்டி**

இப்போட்டிக்கு

க. பொ. த. உயர்தர மாணவர்கள் இருவர் ஒரு கல்லூரியில் இருந்து பங்கு பற்ற முடியும்.

விண்ணப்பங்கள்: 05 - 05 - 1993 க்கு முன்னர் பாடசாலை அதிபரால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு, அனுப்பப்படுதல் வேண்டும்,

கட்டுரை விடயம்:

"உலக சுற்றாடல் தினத்தை" ஒட்டியதாக அமையும்.

★ போட்டிக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

— அதிபர்.

பரி. யோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்,
28-04-1993

(சி-5028)


## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**லூதர் ஜே. செல்வராஜா**

",அக்கரையில் நாம் சந்திப்போம்"

மனைவி - ராணி,
பிள்ளைகள் - துஷான், ஜெனி.

"செல்வகிரி",
57, அரசடி றோட்,
யாழ்ப்பாணம். (25315)

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 15 — 11 — 1919



விண்ணில்: 10 — 05 — 1992

**திருமதி இராசம்மா நடராஜா**

திதி: 28 - 04 - 199

தந்தையும் தாயுமாகி
தரணி மீது நாங்கள்
தனமுடன் சிறந்து வாழ
தான்பல செய்து நின்றீர்
தமனியம் போன்ற எங்கள்
தாயே நின் நினைவாக
தரையில் உள்ளவரை நாம்
தாங்குதல் செய்திடுவோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சும்:

மக்கள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

திரு. ந. சூரியநாதன்,
சுதுமலை தெற்கு.

(சி-4951)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

யமுனாப்பாறி ஒரு வருடக் கடா விற்பனைக்குண்டு பட்டித் தேவைகளுக்கு உகந்த நிலையில் உள்ளது. 6/2, சந்தானா கோவில் வீதி, பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குளி [25414]

இரண்டு மாத குட்டியுடன் நல்ல இன இரண்டாம் ஈத்து ஆடு விற்பனைக்கு உண்டு. 55, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (6138)

நல்ல நிலையில் உள்ள ஹை. ஏ. எஸ். வான் (டீசல்) அல்லது E.L.F. ட்றக், டீசல் கார் உடன் தேவை. தொடர்பு: சனி, ஞாயிறு காலை 9—12, மாலை 3—6 வரை. Sritharan, Becon கல்வி நிலையம், யாழ்ப்பாணம். (6131)

## விற்பனையாகின்றது

லீலா சித்திரக்கலண்டர் புதிய லிதோ படங்களுடன் விற்பனையாகின்றது. மக்மிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-4940)

## பணிப்பெண் தேவை

வளர்ந்த மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு 50 வயதிற்கு உட்பட்ட பணிப்பெண் தேவை. தொடர்பு கொள்க: S.M. டோமினிக், இல. 32, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். (25424)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் பெருகுமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்கள். தினமும் காலை 8-30—12 30, பி.பகல் 3-00—6-00. த. சிவானந்தன பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (25516)

## புலமைப் பரிசில் பரீட்சை

1992ஆம் ஆண்டு உட்பட 7 வருட வினா-விடை விற்பனையாகிறது. க.பொ.த. சாதாரண வினா விடையும், 1992 உட்பட சகல பாடங்களுக்கும் விற்பனையாகின்றது. அப்பியாசக்கொப்பிகள் மலிவாக விற்பனை செய்யப்படுகின்றன அறிவகம் புத்தகசாலை, 374, வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (சி-4946)

## பயிற்சி (ஆண்டு 4, 5)

ஆண்டு 5 புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை வினாத்தாளும், ஆண்டு 4 பரீட்சை வினாத்தாளும், (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 02 - 05 - 1993 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [25423]

## பற்பொடி

தங்கா பற்பொடி தரமானது. நயமானது, கேட்டு வாங்குங்கள். அனைத்துப் பல்வியாதிகளையும் நீக்கி பற்களுக்குப் பலத்தையும் அதி வெண்மையையும் தரும் வகையில் ஆயுள்வேத மூலிகைகள் கொண்டு சுத்தமான முறையில் தயாரிக்கப்பட்டது. தயாரிப்பாளர்: தங்காஸ் இன்டஸ்றீஸ், (வளலாய்) ஊரெழு (25,12)

## முதல் நூல்கள்

இலங்கை வானொலி தமிழ்ச்சேவைத் தனி நாடகங்களை முதன் முதலாக "செட்டிக்காரர்கள்" "முதலாம் பிள்ளை" 30/-. நூல்களாக வெளியிட்டவர் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை. இந்த 19 நாடகங்களையும் பலரும் மேடையில் நடித்து விட்டனர். (5409)

# சன்னி ஆண்டு கண்ணீர் அஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 19 — 10 — 1958 | 08 — 05 — 1992 |

## யசோதரலிங்கம் பாலகுமார்

Dip. in Buis. /dmn. (London M. B A. - Student
(முன்னாள் உத்தியோகத்தர் - The Finance Co. Jaffna)

திதி: 28 — 04 — 1993

காலங்கள் சொந்தமையா வசந்தங்கள் பந்தமையா
ஆண்டவனின் சந்தங்கள் மானிடத்தின் சொந்தங்கள்
பாலகுமாரனும் பாரினிலே மலர்ந்து
பரந்தாமன் பதம் நாடினயோ!

இட்ட இடமோ திருநெல்வேலி
பட்ட இடமோ லண்டன் மாநகரம்
பாலகுமாரனின் தூலமோ எமக்கு
பார்த்திடக் காணாததோ!

பருவமதியானாய் இன்றோ சங்கமத்தின் நதியானாய்
அஸ்தி கலக்குதையா ஆனந்தம் பெருகுதையா
ஆண்டுத் திவஷத்தில் அணையாக் கவசமானாய்
சோதரர்களின் பாசத்தில் அங்கம் கொண்டு -
நேசமானாய்.

அற்புத விளக்கே செழுங்கமலத் தொண்டனே
பாபாவின் பக்தனே பரவசத்தில் இன்று
எம்மைக் கண்ணோக்காயோ; ஆண்டுத் திவஷத்தில்
அமரத்துவம் ஆனாயோ!

அன்புச் சகோதரர்கள், மைத்துனர்கள்,
மைத்துனிகள், பிள்ளைகள்.

தாயகம்,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (25417)

---

உ

தெல்லிப்பழை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

# மணவாளக் கோலத் திருவிழா

நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகமும் (1008),
அம்பாள் பூந்தண்டிகையில் வீதி உலாவும்

03 - 05 - 1993 திங்கட்கிழமை

காலை 6 - 00 மணி — பகல் 11-00மணி வரை
(1008) சங்காபிஷேகமும் விசேட பூசையும்

நண்பகல் 12 - 30 மணி
அன்னதானம்

மாலை 3 - 3) மணி
வசந்தமண்டபப்பூசை, திருவூஞ்சல்,
அம்பாள் பூந்தண்டிகையில் உலாவருதல்

மாலை 6 - 00 மணி
அர்த்த சாமப் பூசை

- நிர்வாகசபை

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை. (25422)

---

# யாழ்ப்பாணக் கல்லூரி

வட்டுக்கோட்டை

## பட்டப்படிப்புகள் பிரிவு

★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக First in Arts (G A Q) விரிவுரைகள் 10 - 05 1993 திங்கள் பி.ப 3-00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக B. A. Part I விரிவுரைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

## பேராதனைப் பல்கலைக்கழகம்

★ G. A. Q - 1993 மீ.டல் விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

★ G. A. Q. - 1994 கல்வியாண்டிற்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

முதல்வர்
கல்லூரிப் பூங்கா

(சி/5052)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 18 — 05 — 1916 | 29 — 03 — 1993 |

## கணபதிப்பிள்ளை கந்தையா

(இளைப்பாறிய ஆசிரியர்)

"மண்ணுலகில் எம்மில் மகிழ்ந்த உம்மை
விண்ணுலகிலும் யாம் மறவோம்"

அன்பே ஊற்றாகிய எம் இனிய தெய்வமே!
எம் நெஞ்சில் அணையாத நற்தீபமே - எம்மை
பிரிவுக் கடலில் ஆழ்த்திவிட்டு.
இறைவனிடம் சென்ற காரணம் யாமறியோம்
உன் எழில் பொங்கும் திருஉருவை
யாம் காண்பதெப்போ சொல்லுமையா
இறைவனிடம் உன் அன்பைப் பகிர்ந்து
எம்மவர்க்காய் வேண்டிடுவாய் அவர் பதமே.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

ஏழாலை கிழக்கு (25421)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பதவி:
தொழிலாளி
தரம் III - நிரந்தரம்

மேற்படி பதவிக்கான பொதுவுளச்சார்புப் பரீட்சை யாழ். பல்கலைக் கழகத்தில் 1993-05 02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறுமெனக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்ட விண்ணப்பதாரிகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீடத்தில் மேற்படி பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

-பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-04-26

(சி-5053)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

## முழுநேர பட்டப்பின் கல்வித் தகைமை கற்கைநெறி

## 1992/93 புதிய அனுமதி

தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வுநாடிகள் 1993-05-31 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர், நிதிக்கிளையில் ரூபா 10/-செலுத்திப்பற்றுச்சீட்டினைக் கல்விக் கிளையில், சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வுநாடிகள் தோற்ற வேண்டும்.

அனுமதிப்பரீட்சை 1993 - 07 - 25 அன்று பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்களைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும்முகவரிக்கு 1993-05-31 ஆம் அகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

— பதிவாளர்.

யாழ் பல்கலைக்கழகம்.
1993-04-27

(சி/5055)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# கொதிக்கும் கொழும்பு!

தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது சுட்டுக்கொல்லப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத் முதலியின் இறுதிச் சடங்குகள் இன்று கொழும்பில் நடைபெற உள்ளன. இன்றைய இறுதிச் சடங்குகளின் போதோ அல்லது பின்னரோ தலைநகரில் பெரும் கலவரம் வெடிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

தலைநகரில் மட்டுமன்றித் தென்னிலங்கை முழுவதிலுமே வன்செயல் பூகம்பம் எந்த நிமிடமும் வெடித்துத் தீக்கக்கூடும் என்ற கடுமையான பதற்ற நிலை கடந்த நான்கு நாட்களாக அங்கு நிலவி வருகிறது.

கொலையுண்ட லலித்தின் பூதவுடலுக்கு ஜனாதிபதி பிரேமதாசா இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை, அதற்கான காரணங்கள் என்பன தெற்கின் பயங்கரமான பதற்ற நிலைமையை தெளிவுபடுத்துகின்றன.

பிரேமதாசா இறுதி அஞ்சலி செலுத்தச் சென்றால் அவர் தாக்கப்படலாம், ஆத்திரமுற்றிருக்கும் மக்களைக் கட்டுப்படுத்த முடியாமற் போகும் என்ற அச்சத்தின் காரணமாகவே ஜனாதிபதிக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. சகல அதிகாரங்களும், சேனைகளும், பாதுகாப்பும் உள்ள நாட்டின் மிக உயர்ந்த தலைவரையே மக்கள் தாக்கக்கூடிய நிலை உருவாகி இருக்கிறதென்னின் தெற்கு எவ்வாறு கொதித்துக் கொண்டிருக்கிறது என்பதனை இலகுவில் உணர்ந்து கொள்ளலாம்.

சிங்கள மக்களின் கொதிப்பும் மோதலும் எப்போதும் தெற்கில் வாழும் தமிழர்கள் மீதே இறுதியில் சென்று தணிவதுண்டு. லலித் கொலையைப் பயன்படுத்தி இனக்கலவரத்தைத் தூண்டுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்வதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டியிருப்பதை மேலோட்டமாகப் பார்க்கக்கூடாது

லலித் கொலையை ஒரு தமிழ் இளைஞரே செய்தார் என்று அரசு அவசர அவசரமாகப் பிரசாரம் செய்ததில் இரண்டு நோக்கங்கள் இருந்தன.

லலித் கொலையில் ஆளுங்கட்சிக்குச் சம்பந்தமில்லை என்று சிங்கள மக்களுக்குக் காட்டித் தப்பிக் கொள்வது ஒன்று. பழியை விடுதலைப் புலிகள் மீது சுமத்தி தமிழருக்கு எதிரான குரோதத்தை, துவேசத்தை சிங்களவருக்கு ஊட்டி இனக்கலவரத்தை மூட்டி அந்தச் சந்தடிக்குள் லலித் கொலையின் விளைவுகளைத் திசைதிருப்பி விடலாம் என்பது இரண்டாவது நோக்கம்.

இப்போதுள்ள சூழ்நிலையில் அரசாங்கத்தின் மீது குற்றஞ்சாட்டிக் கொண்டு, லலித் கொலையைப் பயன்படுத்தி அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும் என்பதற்காக, எதிர்க்கட்சிகளே இனக்கலவரத்துக்கு தீக்கொள்ளி எடுத்துக் கொடுத்தாலும் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

லலித் கொலையை அரசாங்க அணியினரும், எதிரணியினரும் தமக்கு அரசியல் ஆதாயம் தேடுவதற்குப் பயன்படுத்த முனைந்திருப்பது துலக்கமாகத் தெரிகிறது. ஒரு தலைவனின் கொலையால் மக்களுக்கு ஏற்பட்ட கவலையை, ஆத்திரமாகவும், ஆவேசமாகவும் மாற்றி அந்த அலையைப் பயன்படுத்தி ஏனைய அரசியல் தலைவர்கள் தமக்கு ஆதாயம் தேடும் கேவலம் தான் சனநாயகமா?

அது ஒரு புறமிருக்க, தெற்கில் தமிழர்கள் இளகிய இரும்பாக இருப்பதால் அவர்களை தருணம் வாய்த்த போதெல்லாம் அடித்து நெளிக்கலாம் என்ற எண்ணம் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு இருக்கும் வரை இந்த நாட்டில் அமைதியின் விலை என்ன என்று தொடர்ந்து கேட்க வேண்டியது தான்!

# ஜெயலலிதாவின் பதவி பறிபோகும் நிலை!

## அ.தி.மு.கவும் பிளவுபடலாம்

லண்டன், ஏப் 28

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் பதவிக்கு ஆபத்து ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக பி.பி.ஸி. தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சி ஆட்டம் கண்டிருப்பதை அடுத்து—

ஜெயலலிதா அரசின் நிதியமைச்சரும் தமிழக சட்டமன்றத் தலைவருமான வீ. ஆர். நெடுஞ்செழியன் நேற்று தமது கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் 120 பேருடன் சென்று தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயணசிங்கிடம் மகஜர் ஒன்றைக் கையளித்ததாக அறிவிக்கப்பட்டது.

சட்டமன்றத்தை இடைநிறுத்தம் செய்யவைக்கும் முயற்சியில் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் ஈடுபட்டிருப்பதாக அந்த மகஜரில் அ.தி.மு. கவினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

"சட்டமன்றத்தை இடைநிறுத்தம் செய்யும்படி ஆளுநரைப் பலவந்தப்படுத்துவதற்கு போதுமான காரணங்களை உருவாக்கும் நோக்குடன் காங்கிரஸ் உறுப்பினர்கள் சட்ட மன்றத்தில் செயற்பட்டு வருகின்றனர்.

"சட்டமன்றத்தை இடைநிறுத்தம் செய்ய வைத்தால், தேர்தலைச் சந்திக்காமலேயே ஆட்சி ஒன்றை அமைக்கும் தமது நோக்கத்தை — மாற்றுக் கட்சி ஆட்களை விலை பேசி வளைத்துப் போட்டு — நிறைவேற்றலாம் என காங்கிரஸ் கட்சியினர் கருதுகின்றனர்." — இவ்வாறு மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக எதிரெதிர் அணிகளில் இருக்கும் தி.மு.க., காங்கிரஸ் போன்றவை கூட ஜெயலலிதாவை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்காக ஒன்றுபட்டு செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெயலலிதாவின் பதவிக்கு ஆபத்து என்பதை அறிந்தவுடன் அ.தி.மு. கவின் சட்டமன்ற உறுப்பினர்கள் நிலைகுலைந்து போயுள்ளனர். அவர்களில் [illegible] வைவாசிப் பேராவது பிரிந்து, தனிக் குழுவாகச் செயற்பட்டு, காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து கூட்டாக அரசு ஒன்றை அமைக்கக் கருதி உள்ளனர்.

— இப்படி பி.பி.ஸி தகவல் வெளியிட்டது. (உ-3)

## ஆடு கடித்தவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஏப். 28

விசர்நாய் கடித்த ஆடு ஊர் மனிதர்களைத் தேடித் திரிந்து கடிக்கிறது. அந்த ஆட்டினால் கடிக்கப்பட்டுக் கடியுண்டவர் இப்போது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல்வாய், குமிழடி என்னுமிடத்தில் வீட்டில் வளர்க்கப்பட்ட ஆடு ஒன்றுக்கு விசர் நாய் கடித்து விட்டது. அதன் பின்னர் அது விசர் பிடித்த நிலையில் கற்கள், தகரங்கள், இரும்புக் கம்பிகளை முதலில் கடித்துக் குதறியது அதனைத் தொடர்ந்து அது வீட்டுக்காரர்களையும் கடிப்பதற்காகத் துரத்தியது.

பிரஸ்தாப ஆட்டினால் கடியுண்ட அம்பிகைபாலன் என்பவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவருக்குத் விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டது. (அ-30)

## வயலுக்குச் செல்லத் தடை

யாழ்ப்பாணம், ஏப். 28

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள வயல்களுக்குச் செல்வதற்கு அப்பகுதி விவசாயிகளுக்கு விசேட அதிரடிப்படையினர் தடை விதித்துள்ளனர்.

அப்பகுதி விவசாயிகள் விதைப்பிற்குத் தயாராக இருந்த வேளையில் இந்தத் தடையை அதிரடிப்படையினர் விதித்திருக்கின்றனர். (உ-3)

# உடுவில் உதவி அரச அதிபர் அலுவலக மறியல் போராட்டம் நேற்றுடன் கைவிடப்பட்டது

உடுவில், ஏப் 28

உடுவில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தின் முன்பாகக் கடந்த எட்டு நாட்களாக நடைபெற்று வந்த மறியல் போராட்டம் நேற்றுடன் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

மறியல் போராட்டம் செய்யும் மக்களின் பிரதிநிதிகளும் வலி-வடக்கு உதவி அரச அதிபர் திரு. க. சந்திரராசாவும் நேற்றுக் காலை யாழ். அரச அதிபருடன் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்தே மறியல் போராட்டம் கைவிடப்பட்டது

நிறுத்தப்பட்ட நிவாரணத்தை மீண்டும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு ஒரு வார காலத்திற்குள் சாதகமான முயற்சிகளை மேற்கொள்வதாக அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அளித்த வாக்குறுதியைத் தொடர்ந்து மறியல் போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிடுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

செயலகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முடிவு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு விளக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் கலைந்து சென்றனர்

செயலகத்தில் நடைபெற்ற பேச்சுகளில் கலந்துகொண்ட பிரதிநிதிகளில், ஏழாலை லெனின் சனசமூக நிலையத் தலைவர் திரு.சி.சோதிலிங்கம் தமது கோரிக்கைகளுக்குரிய நியாயங்களை விளக்கும் மகஜர் ஒன்றை அரச அதிபரிடம் கையளித்தார்.

நேற்றைய பேச்சுகளில் யாழ் அரச அதிபருடன் செயலக உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(அ 1:2-162)

## எரித்திரியா தனி நாடாகியது

அடிஸ்அபாபா, ஏப். 28

எதியோப்பியாவில் இருந்து எரித்திரியா பிரிந்து சுதந்திர நாடாகின்றது.

தனிநாடு கோரி கடந்த முப்பது ஆண்டுகளாகப் போராடி வந்த எரித்திரிய மக்களின் கனவு நனவாகிவிட்டது.

கடந்த வாரம் இது தொடர்பாக எரித்திரிய மக்கள் மத்தியில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் எரித்திரியா சுதந்திர நாடாக மாறுவதற்கு ஆதரவாக 10 லட்சத்துக்கும் அதிகமானோர் வாக்களித்தனர். ஆக ஆயிரத்து 800 பேர் மட்டுமே எதிர்த்து வாக்களித்தனர்.

( 6ஆம் பக்கம் பார்க்க)

# சுன்னாகம், உரும்பராய் பகுதியில் லீக்ஸ் உற்பத்தி பெரும் வெற்றி

உடுவில், ஏப். 28

சுன்னாகம், உரும்பராய் ஆகிய இடங்களில் பரீட்சார்த்தமாக பயிரிடப்பட்ட லீக்ஸ் இம்முறை அமோக விளைச்சலைப் பெற்றுள்ளது.

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் விற்பனவு கொள்வனவு சந்தைப்படுத்தல் நுகர்ச்சி சங்கங்களின் சமாச தலைவர் திரு. எஸ். செல்வரட்ணம் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி சங்கங்களின் சமாச அங்கத்தவர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடலின்போது யாழ்ப்பாண மாவட்ட விவசாய, கமத்தொழில் நடவடிக்கைகள் பற்றி செல்வரட்ணம் மேலும் தெரிவித்ததாவது;

லீக்ஸ் மட்டுமல்ல, பூசினிப் பயிர் கூட எமது முயற்சியால் அதிக விளைச்சலை கொடுத்துள்ளது "செனத் எவ் ஒன்று", "அல்றா எவ் ஒன்று", "மெமன் கோல்ட்" போன்ற உயர்ந்த ரக பூசினி விதைகளை விவசாயிகளுக்கு தருவித்துக் கொடுத்து அதிக விளைச்சல் கண்டுள்ளோம். பூசினி மூலமும் இம்முறை விவசாயிகள் அதிக வருமானம் பெற்றுள்ளனர்.

உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தும்போது வியாபாரிகள் மிகக் குறைந்த விலைக்கே அவற்றைக்கொள்வனவு செய்கின்றார்கள். உற்பத்தியாளர்கள் நன்மை பெறக்கூடிய விதத்தில், உற்பத்திப் பொருள்களுக்குரிய விலைகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

இம்மாவட்டத்தில் தரிசு நிலங்களாக கிடக்கும் உவர் மண் தரைகளில் பயிரிடக்கூடிய நெல் விதைகளை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

உருளைக்கிழங்கு, கரட், பீற்றூட் போன்ற பயிர்கள் கூட இவ்வருடம் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிக விளைச்சல் கண்டிருக்கின்றன.

பீற்றூட் குறுகிய காலத்தில் பயிரிடப்பட்டு இலாபம் ஈட்டக்கூடிய ஒரு பயிராகும். ஆயிரம் கன்றுகள் உள்ள தரையில் சுமார் நாலாயிரம் கிலோ பீற்றூட் விளைவிக்க முடியும். இதன் மூலம் ஒரு விவசாயி குறுகிய காலத்தில் 30 ஆயிரம ரூபா வரையில் வருமானம் பெற முடியும்.

விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளையும், ஒத்துழைப்புகளையும் சங்கங்கள் வழங்கினால், யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாய உற்பத்தி வெற்றிபெற முடியும்.

இப்படி அவர் கூறினார்.

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப் 28

இடம் பெயர்ந்த தீவக மக்களுக்கான வலைப்பந்தாட்டப்போட்டி ஒன்று இன்று புதன்கிழமை காலை 8.45 மணிக்கு யாழ் பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடைபெறும்

இப்போட்டியில் வேலணை திருவள்ளுவர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புங்குடு தீவு சிவலைப்பிட்டி விளையாட்டுக்கழகம் மோதும்.

இடம்பெயர்ந்த தீவக மக்களின் விளையாட்டுக்கழகங்கள் கலந்து கொள்ளும் எல்லே விளையாட்டுப் போட்டி நாளை 29 ஆம் திகதி நடைபெறும்.

o o o

யாழ்.நகர் ஐங்கரன் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் ஐங்கரன் வி. க. (வெள்ளை) அணியை எதிர்த்து அடைக்கல அன்னை வி. கவின் "ஏ" அணி மோதும்.

இந்த ஆட்டம் யாழ். ஆஸ்பத்திரி வீதி அடைக்கல மாதா தேவாலயத்துக்கு முன்னால் உள்ள ஐங்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

o o o

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் யாழ் கல்வித் திணைக்களம் நடத்திவரும் மாவட்ட நிலை கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் 17 வயதுப் பிரிவு அணிகள் வருமாறு:-

★ வயாவிளான் ம.ம.வி. எதிர் இளவாலை மெய்கண்டான் ம.வி.

★ நடேஸ்வராக் கல்லூரி எதிர் வேலாயுதம் ம.வி.

o o o

சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக்கழகம் நடத்தும் 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் சுன்னாகம் சிங்கமாப்பாணர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி: சுன்னாகம் ஜொலிபோய்ஸ் எதிர் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம்.

★ மாலை 4.30 மணி; மயிலங்காடு ஸ்ரீமுருகன் வி. க. [illegible] கிராம அபிவிருத்திச் சங்க 'ஏ' அணி.

(உ-89)

# கனடாவில் ஈழத்தமிழர் மீண்டும் மோதல்!

## இடையில் சிக்கி 5 சிங்களவர் காயம்

கனடாவில் வாழும் ஈழத் தமிழர்களிடையே மீண்டும் கோஷ்டி மோதல் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ரொறொன்றோ நகரில் யாழ்ப்பாணத்தின் இரண்டு ஊர்களைச் சேர்ந்தவர்களுக்கிடையே அம்மோதல் இடம்பெற்றது

ஓர் ஊரைச் சேர்ந்தவர்களைத் தேடி வந்த இன்னொரு ஊரைச் சேர்ந்தோர் தாம் தேடிவந்த ஊரைச் சேர்ந்தவர்கள் இல்லாமல்போகவே, கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டனர். அப்போது விருந்து ஒன்றில் கலந்து கொண்டிருந்த ஐந்து சிங்களவர்கள் படுகாயமடைந்தனர்.

இது தொடர்பாக கனேடியப்பத்திரிகைகள், கண்டனம் தெரிவித்துச் செய்திகள் வெளியிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது (உ-எ)

## இம்மாதம் நடைமுறைக்கு வரும்

# உணவு முத்திரைகளுக்கு நாட்டு அரிசி, மா கிடைக்கும்

வலிகாமம்மேற்கு, ஏப் 28

இம்மாதம் (ஏப்ரல்) தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு முத்திரைகளுக்கு நாட்டு அரிசியும் (புழுங்கல்), மாவும், ஹைலன்ட் பால்மாவும் வழங்கப்படவுள்ளன

யாழ் மாவட்டம் முழுவதும் இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு விநியோக முத்திரைகள் ஏப்ரல் மாதம் முதல் அமுல்படுத்தப்படவுள்ளன என்று தெரிந்ததே.

தற்போது இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள கிராம உத்தியோகத்தர்கள் பிரிவில், அந்தந்தப் பிரிவு கிராம உத்தியோகத்தர்களினால் இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு விநியோக முத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குடும்பம் ஒன்றுக்கு குடும்ப அங்கத்தவர்களைப் பொறுத்து அங்கத்தவர்கள் எண்ணிக்கைக்கேற்ப பெறுமதியான ஒரு முத்திரையே வழங்கப்படுகின்றது முன்னர் வழங்கப்பட்ட பெறுமதியில் மாற்றம் எதுவும் இல்லை. ஆனால் இரண்டு வாரத்துக்கு ஒரு புள்ளி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது விநியோகிக்கப்படும் முத்திரைகள் ஏப்ரல், மே ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

ஏப்ரல் மாதத்துக்குரிய முதல் இரண்டு வாரங்களுக்கு மட்டும் வழங்கப்படவுள்ள முத்திரைகளுக்குசீனி வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே தினத்தில் ஒலிக்க இருப்பவை

- ★ கல்வி எமது வாழ்விற்கு! எமது வளத்திற்கு
- ★ கல்விச் சமூகமே! ஒன்றிணைவோம்! தேச நலனை முன்னெடுப்போம்!
- ★ புதிய கல்வியை வகுத்திடுவோம்! புதிய பாதையில் நடந்திடுவோம்
- ★ தேச நலனை முன்வைத்து தேசியக் கல்வியைப் படைப்போம்!
- ★ களத்துச் செய்திகளை காவியங்கள் ஆக்கிடுவோம்!

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அட்சயலிங்கம் சரஸ்வதிதேவி

(பருத்தித்துறை

திருமதி அட்சயலிங்கம் சரஸ்வதிதேவி 26-04-93 திங்கள் சிவபதம் அடைந்தார்.

இவர் வைரமுத்து அட்சயலிங்கத்தின் (இளைப் பாறிய தபால அதிபர்) அன்பு மனைவியும், சிவயோகம், சிவரத்தினம் (அவுஸ்திரேலியா), காலம்சென்ற சிவபாதம், சதிரமலைராசா ஆகியோரின் அன்புச்சகோதரியும், கிருஷ்ணசாமி, காலம் சென்ற கணேசமூர்த்தி (V. V. K. முன்னாள் உரிமையாளர்), புஷ்பவதி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் வசந்தகுமாரி, அட்சயகுமார் (இலங்கைவங்கி மாங்குளம்), உதயகுமார் (பிரான்ஸ்), அனந்தகுமார் (பிரான்ஸ்), விஸ்ணுகுமார் லண்டன்), ஜெயகௌரி ஆகியோரின் அன்புத்தாயாரும், கந்தசாமி, தவநாயகி (பத்தமேனி அச்சுவேலி) ஆகியோரின் அன்பு மாமியும், அஜந்தா, திருமால், அபிராமி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும் அன்னாரின் ஈமக்கிரியைகள் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
வை. அட்சயலிங்கம் (கணவன்)
(இளைப்பாறிய தபால் அதிபர்)
பருத்தித்துறை (25425)

## திருமதி கனகாம்பிகை சுந்தரமூர்த்தி

திருமதி கனகாம்பிகை சுந்தரமூர்த்தி காலமானார்.

இவர் காலஞ்சென்ற நன்னிக்குட்டி சுந்தரமூர்த்தி (முன்னாள் விதானையார், சமாதான நீதிபதி, மரண விசாரணை அதிகாரி, தெல்லிப்பளை) அவர்களின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27-04-93 கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
திருமதி அம்பிகாதேவி இராசையா
கப்பல் வளவு, (பெறாமகள்)
சுன்னாகம். (5898)

## திருமதி சின்னையா பூரணம்

வண்ணார்பண்ணை மேற்கு திருமதி சின்னையா பூரணம் 27-4-93 இல் சிவபதம் அடைந்துவிட்டார்

இவர் சின்னையாவின் அன்பு மனைவியும், பாலசிங்கம் (ஆனந்தம் காபிரேற்றர்), வஞ்சாட்சரம் (பாங்கொக்), இராஜேஸ்வரி, கமலாதேவி, சத்தியபாமா ஆகியோரின் அன்புத் தாயாரும், திருநாவுக்கரசு (யூனியர் — மெக்கானிக்), துரைசிங்கம் (மெக்கானிக்), விவேகானந்தா (லிபியா), லீலாவதி, ஜெயசாந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரஞ்சன் (பிரான்ஸ்), சயந்தன், ஜெயானந்தன் (சுவிஸ்), ஜெயந்தி, ஜெயசுதா, ஜெசிந்தா, நிராஜ் துஷ்யந்தன், துஷ்யந்தி, வேணுயா, டசிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தங்கப்பிள்ளையின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-04-93 இன்று காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
கணவர், மக்கள், மருமக்கள்
601/3 A கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (25430)

## விஸ்வலிங்கம் சிவஞ்ஞானம்

அத்தியடியை பிறப்பிடமாக கொண்டவரும், திருநெல்வேலி இராமலிங்கம் வீதியை வசிப்பிடமாக கொண்டவரும், முன்னைநாள் அனுத்கம வர்த்தகருமான வி சிவஞ்ஞானம் 27-04 93 செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, நடராசா, தாமோதரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மகாந்தன் (பொறியியலாளர், இலண்டன்), யோகேந்திரா (பொறியலாளர், சிலாபம்), தவேந்திரா (நில அளவையாளர், புத்தளம்), ஜீவேந்திரா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலினி (இலண்டன், கமலினி (ஆசிரியை, சிலாபம்), வசந்தி (ஆசிரியை, மாகோ) ஆகியோரின் மாமனாரும், தாரணிகரன், சுமி, கோசலா, குமரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று (28-04-1993) புதன்கிழமை 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி செம்பாடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
இராமலிங்கம் வீதி, ப. ரகுநாதன்
திருநெல்வேலி கிழக்கு, (பெறாமகன்)
முடமாவடி. ([illegible])

## விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப் 28

ஜனசவிய கருத்திட்டம் யாழ் மாவட்டத்தில் விரைவில் ஆரம்பித்து வைக்கப்படும்.

முதலில் இதனை யாழ். பிரதேச செயலகத்தில் தொடக்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பிரதேச செயலகத்தில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவும் இத்திட்டத்தின் கீழ் 50ஆயிரம் ரூபா பெற உள்ளன. (இ-17)

## அரச தரப்பினர்,..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிரியைகள் கொழும்பில் நடைபெற்றபோது அதில் பங்குபற்ற வந்திருந்த அரசதரப்பு பிரமுகர்கள் மற்றும் அமைச்சர்கள் அங்கு திரண்டிருந்த பொது மக்களால் தாக்கப்பட்டதை அந்தச் செய்தி ஏஜென்ஸி சுட்டிக் காட்டியது.

## லலித் சுடப்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தரணி கேட்டுக் கொண்டார்.

கொலைச் சம்பவம் பற்றிய வீடியோ நாடாவே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

லலித் உயிரிழந்த இடத்துக்குச் சற்றுத் தள்ளி காணப்பட்ட இளைஞனின்சடலத்தில் இருந்து எடுக்கப்பட்ட அடையாள அட்டை பற்றியும் நீதிமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது

அந்த அடையாள அட்டையில இருந்த படம் மாற்றப்பட்டு, புதிய படம் ஒட்டப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலீஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

மேற்படி இளைஞனின் சடலம் லலித்தை கொன்ற கொலையாளியினுடையதா? அல்லது அப்பகுதியில் கொண்டு வந்து போடப்பட்ட வேறு ஒருவரின் சடலமா? — என்பதை நீதிமன்றம் முதலில் தீர்மானிக்கவேண்டும் என உயிரிழந்த லலித்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரினர்.

விசாரணை நாளை மறுதினம் வரை ஒத்திவைக்கப்பட்டது.

## அப்பாவியான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தது இல்லை அவர் எதிலும் என்னுடன் போட்டியிட்டதும் இல்லை

எதிர்க்கட்சியினர் சற்றேனும் சிந்திக்காமல் அத்துலத் முதலியின் கொலைக்கு என்னையும் எனது அரசையும் குற்றஞ்சாட்டுகின்றார்கள்.

ஓர் அப்பாவி மனிதன் மீது போலியான குற்றச்சாட்டைச் சுமத்துகின்றார்கள். உண்மை ஒரு நாள் வெளிவந்தே தீரும்.

யாராவது ஒருவர் கொல்லப்பட்டு விட்டால் அதனை நான்தான் செய்தேன் எனக் கூறுவதற்கு எதிர்க் கட்சிகள் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றன.

ராஜீவ் காந்தி கொலையுண்ட வேளையிலும் என்னை நோக்கியே எதிர்க் கட்சியினரின் சுட்டு விரல்கள் திரும்பின. கொலைகாரன் நானே என்றும் அவர்கள் கூறினர்.

அவர்கள் என்னை விட்டு வைத்தது ஒன்று மகாத்மா காந்தியின் கொலையுடன்; மற்றையது அண்மையில் தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலாவின் நண்பர் கொலையுண்ட வேளை, — இவ்வாறு அவர் குறிப்பிட்டார். (உ-ஒ-எ)

## வாதுவ ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட உள்ளன,

அதற்கேற்றவாறு இன்று புதன் காலை 9 மணிக்கு முன்னதாக பொதுமக்கள் தமது வெளிமாவட்ட, வெளிநாட்டுக் கடிதங்களை யாழ் பிரதம தபாலகத்தில் உள்ள பெட்டியில் சேர்க்குமாறுவடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் [illegible]

[அ-109-172]

## விவசாய அடையாள அட்டை

எலிகாமம் மேற்கு, ஏப் 28

யாழ் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு புதிதாக விவசாய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை கமநல சேவைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது

பல வருடங்களுக்கு முன்னர் விவசாயிகளுக்கு விவசாய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டன. நீண்டகாலமாக விவசாய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவில்லை

தற்போதைய சூழ்நிலையில் விவசாய அடையாள அட்டை அவசியமாக தேவைப்படுவதனால் யாழ். மாவட்ட கமநல சேவைத் திணைக்களம் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலுமுள்ள கமநலசேவைத் திணைக்களங்கள் மூலம் விவசாயிகளுக்கு விவசாய அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (ஒ-175)

## எரித்திரியா..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எரித்திரிய மக்களின் இந்த முடிவை ஏற்றுக்கொள்வதாக எதியோப்பியா அரசும் அறிவித்துள்ளது

எரித்திரியா சுதந்திர நாடாக மாறிய பின்னர் அந்த நாட்டுடன் நெருங்கிய பொருளாதார மற்றும் கலாசாரத் தொடர்புகளை தாம் தொடர்ந்தும் வைத்து இருக்கப்போவதாக எதியோப்பியா அறிவித்துள்ளது. (உ-எ)


யாழோசை மன்ற மேம்பாட்டு நிதிக்காக

★ வேணுகான இசைநிகழ்வும்
★ பல பாடகர்கள், பாடகிகள்

கலந்து சிறப்பிக்கும்

**செந்தமிழ் பாட்டு**

இசை நிகழ்வும்

**(MUSICAL SHOW)**

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு
2-5-93 — காலை 9 மணி, மாலை 3 மணி

அனைவரையும் அழைக்கின்றோம்

பிரசுர அன்பளிப்பு:
**கண்ணன் லொஜ்**
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
(25427)



**ஷப்றா கிண்ணத்துக்காக**

ஜொலி ஸ்ரார்ஸ் வி. க. நடத்தும்
மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்

**கிரிக்கெட் போட்டி—1993**

விண்ணப்ப இறுதி தினம்:- நாளை மாலை 5 மணி
அணி ஒழுங்குத் தெரிவு:- 30-04-1993
மாலை 4 மணிக்கு
யாழ் இந்துக் கல்லூரியில்



| G. A. Q. | 1St. in Com. |

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
[வெளிவாரி]

மேற்படி பாடநெறிக்கு பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்கான விரிவுரைகள்:
**ஆரம்பம்: 02-05-1993**
காலை 8மணி

விவரங்களுக்கு:
எஸ். அருள் நங்கை,
**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி/4988)


## கண்ணீர் அஞ்சலி

### திரு. சி. க. வேலாயுதபிள்ளை

(சர்வோதய ஆலோசகர்)

11-04-1993 இல் கொழும்பில் காலமான எமது ஆலோசகர் திரு சி க. வேலாயுதபிள்ளை அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்.

பிராந்திய இயக்குநர்,
மாவட்ட இணைப்பாளர்,
ஊழியர்கள்.

தேசிய சர்வோதய சிரமதான சங்கம்,
யாழ். மாவட்டம். (25426)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28-04-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org